# அரச நிதி

இறைக் கொள்கையானது உறுதிப்பாட்டுக் குறிக்கோள்களை அடையும் நோக்கில் 1990 இல் தாக்குப் பிடிக்கக் கூடிய அளவிலான வரவு செலவுத் திட்டக் குறையினை அடையும் அதன் விசையினைத் தொடர்ந்தும் பேணியது. இதன்படி மொத்த வரவு செலவுத் திட்டக் குறை/மொ.உ.உ. விகிதம் 10 சத வீதத்தில் மட்டுப்படுத்தப்பட்டிருந்த வேளையில் குறையை விரிவுத் தாக்கத் தினால் நிதியிடுதல் முற்றாக இல்லாதொழிக்கப்பட்டது. 1988 இல் மொ.உ.உ. இல் 15 சதவீதத்திற்கு மேலாக விளங்கிய வரவு செலவுத் திட்டக் குறை 1989 இல் மொ.உ.உ. இல் 11 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அண்மை ஆண்டு களில் புதிய அரசிறை வழிமுறைகளின் மூலம் அதிகரிக்கப்பட்ட அரசிறைச் சேகரிப்பு முயற்சிகள் 1990 இல் அரசிறை/மொ.உ.உ. விகிதத்தைப் பெரும் பாலும் முந்திய ஆண்டில் அடையப்பட்ட அதே மட்டமான 21.2 சதவீதத்தில் பேணுவதற்கு உதவின. இதேவேளை அண்மை ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றகரமான காசு முகாமைத்துவ செயல்பாடுகளின் ஊடாக மொ. உ. உ. இன் விகிதாசாரமான மொத்தச் செலவு 1989 இன் 32.6 சத வீதத்துடன் ஒப்பிடுகையில் 1990 இல் 31.1 சதவீதத்தில் மட்டுப்படுத்தப் பட்டது. நடைமுறைச் செலவு/மொ.உ.உ. விகிதாசாரம் முந்திய ஆண்டின் மட்டமான 22.6 சதவீதத்திலிருந்து 22.4 சதவீதத்திற்குச் சிறிதளவால் வீழ்ச்சி யடைந்த வேளையில் மொ.உ.உ. தொடர்பான மூலதனச் செலவும் தேறிய கடன் வழங்கலும் 1989 இன் 10 சதவீதத்திலிருந்து 1990 இல் 8.8 சதவீதத் திற்கு வீழ்ச்சியடைந்தன. அரச முதலீடுகளில் ஏற்பட்ட படிப்படியான குறைப்பு அண்மைய ஆண்டுகளில் இறைச் சீராக்கத்தில் ஏற்பட்ட முக்கிய பண்பாக விளங்கியது.

குறையை நிதியிடுவதில் உள்நாட்டுக் கடன்பாடுகள் மொ.உ.உ. இல் 4.9 சதவீதமாகக் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. 1988 இன் 9.5 சதவீதத்துடனும் 1989 இன் 4.9 சதவீதத்துடனும் இது ஒப்பிடத்தக்கது. முந்திய ஆண்டினைப் போன்று 1990 இன் உள்நாட்டுக் கடன்பாடுகளில் பெருமளவு தொகை வங்கியல்லா மூலங்களிலிருந்து பெறப்பட்டது. அத்தகைய கடன்பாடுகளில் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பங்கு திறைசேரி உண்டியல்களின் வழங்கல் மூலம் பெறப்பட்டது. மொ. உ. உ. இல் வரவு செலவுத்திட்ட நோக்கங் களுக்காகக் கடன்கள், கொடைகள் என்பவற்றின் வடிவில் வெளிநாட்டு மூலங்களிலிருந்து கிடைக்கத்தக்கதாகவிருந்த மூலவளங்கள் 1989 இன் 4.9 சத வீதத்திலிருந்து 1990 இல் 5.7 சதவீதத்திற்கு அதிகரித்தன.

## இறைச் செயலாற்றம்

1990 இல் அரசின் மொத்த அரசிறை ரூ. 679,640 இலட்சமாக அமைந்து 26 சதவீத அதிகரிப்பைக் காட்டிய வேளையில் நடைமுறைச் செலவும் ரூ. 717,710 இலட்சமாக அமைந்து அதேயளவான 26 சதவீதம் கொண்ட உயர்ந்த வளர்ச்சியைப் பதிவு செய்தது. இதன் விளைவாக வரவு செலவுத் திட்டத்தின் நடைமுறைக் கணக்கு முந்திய ஆண்டின் பற்றாக் குறையான ரூ. 29,050 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1990 இல் ரூ. 38,070 இலட்சம் கொண்ட குறையை உருவாக்கியது. மொத்த விற்பனவு வரிகள், இறக்குமதித் தீர்வைகள், கலால் தீர்வைகள் போன்ற முக்கிய அரசிறை மூலங்கள் 1990 இல் அதிகரித்த அரசிறைச் சேகரிப்புக்களை உருவாக்கின. இம் மூலங்களிலிருந்தான

அரசிறையின் வளர்ச்சி வரி/மொ.உ.உ. விகிதாசாரத்தை 1989 இன் 18.9 சதவீதத்திலிருந்து 1990 இல் 19.1 சதவீதத்திற்கு உயர்த்துவதற்கு உதவியது.

இதே வகையான அபிவிருத்தியாக வட்டிக் கொடுப்பனவுகள், ஏனைய பொருட்களும் பணிகளும், வீட்டுத்துறைக்கான மாற்றல்கள் போன்ற குறிப்பிட்ட சில செலவு விடயங்களும் 1990 இல் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தன. மொத்தச் செலவில் ஏறக்குறைய 21 சதவீதத்திற்கு வகை கூறிய அரச படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 1989 இல் மொ.உ.உ. இன் 5.7 சதவீதத்திலிருந்து 1990 இல் 6.4 சதவீதத்திற்கு உயர்வடைந்தன. இவ்வாறே மொ.உ.உ. தொடர்பான ஏனைய பொருட்கள், பணிகளின் செலவும் 1989 இன் 4.4 சதவீதத்திலிருந்து 1990 இல் 4.5 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. உணவு முத்திரைத் திட்டம், மதிய உணவு, சனசக்தி நிகழ்ச்சித் திட்டம் என்பனவற்றி னூடாக வழிப்படுத்தப்பட்ட மொத்தச் செலவும் மொ.உ.உ. இன் 1.8 சத வீதத்திலிருந்து மொ.உ.உ. இன் 2.4 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. எனினும் சம்பளங்களும் கூலிகளும், ஓய்வூதியக் கொடுப்பனவுகள் என்பன தொடர்பான செலவு முந்திய ஆண்டின் மொ.உ.உ. இல் 7.6 சதவீதத்திலிருந்து 1990 இல் 6.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இவ் அபிவிருத்திகளைப் பிரதிபலிப்பதாக, மொத்த நடைமுறைச் செலவு/மொ.உ.உ. விகிதாசாரம் முந்திய ஆண்டின் மட்டமான 22.6 சதவீதத்திலிருந்து 1990 இல் 22.4 சதவீதத்திற்கு அசைந்தது. இதேவேளை மொ.உ.உ. தொடர்பாக மூலதனச் செலவும் தேறிய கடன் வழங்கலும் 1989 இன் மொ.உ.உ. இல் 10 சதவீதத்திலிருந்து 1990 இல் 8.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக, மொத்தச் செலவு/மொ.உ.உ. விகிதாசாரம் 32.6 சதவீதத்திலிருந்து 31.1 சதவீதத்திற்கு வீழ்ச்சி யடைந்து அரச முதலீட்டு மட்டத்தில் செய்யப்பட்ட சீராக்கங்களை முற்றாகப் பிரதிபலித்தது.

அரசிறையிலும் செலவிலும் ஏற்பட்ட அபிவிருத்திகள் முந்திய ஆண்டின் ரூ. 281,850 இலட்சம் கொண்ட (11.2 சதவீதம்) பற்றாக்குறையுடன் ஒப் பிடுகையில் ரூ. 318,500 இலட்சம் கொண்ட (மொ.உ.உ. இல் 9.9 சதவீதம்) குறை (கொடைகளுக்கு முன்) ஏற்பட வழிவகுத்தன. எனினும் இக்குறையை நிதியிடுவதற்கான உள்நாட்டுக் கடன்பாட்டுத் தேவை மொ.உ.உ. இல் 4.9 சத வீதம் கொண்ட அளவிற்குக் குறைக்கப்பட்டது. இது, குறையில் ஏறக்குறைய 60 சதவீதம் கொண்ட தொகை வெளிநாட்டுக் கடன்கள், கொடைகள் என்ப வற்றின் வாயிலாக நிதியிடப்பட்டமையால் ஏற்பட்டதாகும். பெரும்பாலும் உள்நாட்டுக் கடன்பாட்டுத் தேவை முழுவதும் உள்நாட்டு வங்கியல்லா மூலங் களிலிருந்து திரட்டப்பட்டமை 1990 இன் குறையை நிதியிடலில் முக்கிய பண் பாக விளங்கியது. உள்நாட்டு வங்கியல்லா மூலங்களினூடாகப் பெறப்பட்ட மொத்த மூலவளங்களில் ரூ. 104,370 இலட்சம் கொண்ட தொகை திறைசேரி உண்டியல்களின் வழங்கல் மூலம் பெறப்பட்ட வேளையில் மீதித் தொகை பெரும்பாலும் ரூபாப் பிணைகள், தேசிய பாதுகாப்பு முறிகள் போன்ற நடுத்தர

## அட்டவணை 1.48

### அரசின் இறைத்தொழிற்பாடுகளின் தொகுப்பு

ரூபா பத்து இலட்சம்

| விடயம் | | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | 1990 தற்காலிகம் | 1991 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த அரசிறையும் கொடைகளும் | ... | 40,991 | 46,822 | 48,337 | 60,386 | 68,062 | 74,662 | 79,529 |
| மொத்த அரசிறை | ... | 37,238 | 42,145 | 41,749 | 53,979 | 61,262 | 67,964 | 71,529 |
| வரி அரசிறை | ... | 31,272 | 35,119 | 35,946 | 47,513 | 55,920 | 61,206 | 64,899 |
| வரியல்லா அரசிறை | ... | 5,966 | 7,026 | 5,803 | 6,466 | 5,342 | 6,758 | 6,630 |
| கொடைகள் | ... | 3,753 | 4,677 | 6,588 | 6,407 | 6,800 | 6,697 | 8,000 |
| செலவினமும் மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் | ... | 59,193 | 63,894 | 76,532 | 82,164 | 89,861 | 99,814 | 107,551 |
| நடைமுறை | ... | 33,966 | 39,560 | 46,132 | 56,884 | 63,561 | 71,771 | 72,962 |
| மூலதன | ... | 23,236 | 22,816 | 22,878 | 20,750 | 21,653 | 19,161 | 28,118 |
| மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கல் | ... | 1,991 | 1,518 | 7,522 | 4,530 | 4,647 | 8,882 | 6,471 |
| நடைமுறைக் கணக்குமிகை/குறை (—) | ... | 3,272 | 2,585 | — 4,383 | — 2,905 | — 2,299 | — 3,807 | — 1,433 |
| வரவுசெலவுத் திட்டக்குறை (கொடைகளுக்கு முன்) | ... | — 21,956 | — 21,749 | — 34,783 | — 28,185 | — 28,599 | — 31,850 | — 36,022 |
| வரவுசெலவுத் திட்டக்குறை (கொடைகளுக்குப் பின்) | ... | — 18,203 | — 17,072 | — 28,195 | — 21,778 | — 21,799 | — 25,153 | — 28,022 |
| நிதியிடல் | ... | 18,203 | 17,072 | 28,193 | 21,778 | 21,799 | 25,152 | 28,022 |
| வெளிநாட்டுக் கடன்பாடு | ... | 9,061 | 5,716 | 7,128 | 5,926 | 10,558 | 11,644 | 19,883 |
| உள்நாட்டுக் கடன்பாடு | ... | 9,142 | 11,356 | 21,067 | 15,852 | 11,241 | 13,509 | 8,139 |
| சந்தைநயல்லாக் கடன்பாடு (அ) | ... | — 669 | 1,415 | 1,687 | 5,300 | — | 60 | — |
| சந்தைக்கடன்பாடு | ... | 9,811 | 9,941 | 19,380 | 10,551 | 11,241 | 13,448 | 8,139 |
| வங்கியல்லா | ... | 6,765 | 6,400 | 9,227 | 13,838 | 10,199 | 13,074 | 12,639 |
| வங்கி | ... | 3,047 | 3,541 | 10,153 | — 3,286 | 1,042 | 374 | — 4,500 |

(தொடரும்)

(அ) 1989 இன் பகலவில் செலுத்தப்பட வேண்டிய நிலுவையாக விளங்கிய 5,34.780 இலட்சம் கொண்ட அதிகரிப்பிற்கும் 1990 இன் செலவுகளில் செலுத்தப்பட வேண்டிய நிலுவையில் ஏற்பட்ட 3,21.070 இலட்சம் கொண்ட வீழ்ச்சிக்கும் சீராக்கம் செய்யப்பட்டது.

## அட்டவணை 1.48

### அரசின் இறைத் தொழிற்பாடுகளின் தொகுப்பு (மொ. உ. உ. இன் சதவீதமாக)

(தொடர்ச்சி)

| விடயம் | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | 1990 தற்காலிகம் | 1991 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த அரசிறையும் கொடைகளும் ... ... | 22.8 | 23.8 | 21.8 | 24.0 | 24.0 | 23.3 | 21.7 |
| மொத்த அரசிறை ... ... | 20.7 | 21.4 | 18.8 | 21.4 | 21.6 | 21.2 | 19.5 |
| வரி அரசிறை ... ... | 17.4 | 17.9 | 16.2 | 18.9 | 19.7 | 19.1 | 17.7 |
| வரியல்லா அரசிறை ... ... | 3.3 | 3.6 | 2.6 | 2.6 | 1.9 | 2.1 | 1.8 |
| கொடைகள் ... ... | 2.1 | 2.4 | 3.0 | 2.5 | 2.4 | 2.1 | 2.2 |
| செலவினமும் மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் ... | 33.0 | 32.5 | 34.5 | 32.6 | 31.7 | 31.1 | 29.3 |
| நடைமுறை ... ... | 18.9 | 20.1 | 20.8 | 22.6 | 22.4 | 22.4 | 19.9 |
| மூலதன ... ... | 12.9 | 11.6 | 10.3 | 8.2 | 7.6 | 6.0 | 7.7 |
| மீள் கொடுப்பனவைக்கழித்த கடன் வழங்கல் ... | 1.1 | 0.8 | 3.4 | 1.8 | 1.6 | 2.8 | 1.8 |
| நடைமுறைக்கணக்கு மிகை/குறை (—) ... | 1.8 | 1.3 | — 2.0 | — 1.2 | — 0.8 | — 1.2 | — 0.4 |
| வரவுசெலவுத்திட்டக்குறை (கொடைகளுக்கு முன்) ... | — 12.2 | — 11.1 | — 15.7 | — 11.2 | — 10.1 | — 9.9 | — 9.8 |
| வரவுசெலவுத்திட்டக்குறை (கொடைகளுக்குப்பின்) ... | — 10.1 | — 8.7 | — 12.7 | — 8.6 | — 7.7 | — 7.8 | — 7.6 |
| நிதியிடல் ... ... | 10.1 | 8.7 | 12.7 | 8.6 | 7.7 | 7.8 | 7.6 |
| வெளிநாட்டுக்கடன்பாடு ... ... | 5.0 | 2.9 | 3.2 | 2.4 | 3.7 | 3.6 | 5.4 |
| உள்நாட்டுக்கடன்பாடு ... ... | 5.1 | 5.8 | 9.5 | 6.3 | 4.0 | 4.2 | 2.2 |
| சந்தையல்லாக்கடன்பாடு ... | — 0.4 | 0.7 | 0.8 | 2.1 | — | — | — |
| சந்தைக்கடன்பாடு ... ... | 5.5 | 5.1 | 8.7 | 4.2 | 4.0 | 4.2 | 2.2 |
| வங்கியல்லா ... ... | 3.8 | 3.3 | 4.2 | 5.5 | 3.6 | 4.1 | 3.4 |
| வங்கி ... ... | 1.7 | 1.8 | 4.6 | — 1.3 | 0.4 | 0.1 | — 1.2 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## இறை அளவுகளின் போக்குகள்




இலங்கை மத்திய வங்கி.

நீண்டகால அரச பிணைகளினூடாகப் பெறப்பட்டது. எனவே 1990 இல் உள்நாட்டு மூலங்களிலிருந்து குறையை நிதியிடுகையில் குறுங்காலக் கடன்பாடுகள் மீது அதிகம் தங்கியிருக்க நேரிட்டது. 1986—1990 காலப்பகுதியில் அரசின் இறைத் தொழிற்பாடுகளின் தொகுப்பு அட்டவணை 1.48 இல் தரப்பட்டுள்ளது.

**அரசிறை**

1990 இல் அரசின் அரசிறை ரூ. 679,640 இலட்சமாக விளங்கியது. இது முந்திய ஆண்டின் அரசிறைச் சேகரிப்பான ரூ. 539,790 இலட்சத்தினைவிட 26 சதவீதம் அதிகமானதாகும். வரி அரசிறை ரூ. 612,060 இலட்சமாக அமைந்து 29 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்ததுடன் முந்திய ஆண்டினைப் போன்று மொத்த அரசிறையில் 90 சதவீதத்திற்கு வகை கூறியது. மொத்த வரி அரசிறையில் உள்நாட்டுப் பொருட்கள் பணிகள் மீதான வரிகளின் பங்கு 1989 இன் 44 சதவீதத்திலிருந்து 1990 இல் 47 சதவீதத்திற்கு உயர்வடைந்த வேளையில் பன்னாட்டு வர்த்தகம் தொடர்பான வரிகளிலிருந்து கிடைத்த அரசிறையின் பங்கு 35 சதவீதத்திலிருந்து 32 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. முந்திய ஆண்டினைப் போன்று மொத்த வரி அரசிறையில் வருமான வரிகள் 12 சதவீதப் பங்கினை வகித்தன. சொத்துக் கைமாற்றல்கள் மீதான வரிகளின் பங்கு 5 சதவீதமாக மாற்றமின்றியிருந்தது.

வரியல்லா அரசிறை மூலங்கள் ரூ. 67,580 இலட்சத்தினை உருவாக்கி 1990 இல் 4.5 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியைக் காட்டின. தொலைத் தொடர்புத் திணைக்களத்தின் தொழிற்பாட்டு மிகை ரூ. 22,350 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டினைவிட இரு மடங்கு அதிகரிப்பைப் பதிவு செய்து வரியல்லா அரசிறையில் மூன்றில் ஒரு பங்கினை வழங்கியது. நிருவாகக் கட்டணங்கள், அறவீடுகள், வட்டி வருமானம் என்பவற்றிலிருந்தான அரசிறை 1990 இல் வரியல்லா அரசிறையில் மேலும் 29 சதவீதத்தை வகித்தது.

உள்நாட்டுப் பொருட்கள் பணிகள் மீதான வரிகளிலிருந்து கிடைத்த அரசிறைச் சேகரிப்பு ரூ. 287,700 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டின் 22 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 38 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பைப் பதிவு செய்தது. உள்நாட்டுப் பொருட்கள் பணிகளிலிருந்து கிடைத்த வரி அரசிறையில் 71 சதவீதத்திற்கு வகைகூறும் மொத்த விற்பனவு வரிகளிலிருந்தான அரசிறை ரூ. 202,910 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டின் அரசிறை வரவுகளைவிட 38 சதவீதத்தினால் அதிகரித்தது. தயாரிப்பு நடவடிக்கைகளிலிருந்தான மொத்த விற்பனவு வரிச் சேகரிப்பு ரூ. 67,980 இலட்சமாக அமைந்து 51 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. இது வெளியீட்டின் அதிகரித்த பெறுமதிஉயர்ந்த வரி வீதங்கள் என்பன காரணமாக ஏற்பட்டதாகும். பெருந்தொகையான தெரிந்தெடுக்கப்பட்ட ஆடம்பர மற்றும் ஓரளவு ஆடம்பரப் பொருட்கள் மீதான முந்திய ஆண்டின் 15 சதவீத 20 சதவீத வரி வீதங்களுடன் ஒப்பிடுகையில் 1990 இல் இவை முறையே 20 சதவீத, 40 சதவீத வரி வீதத்திற்கு உட்பட்டிருந்தன. இவ்வாறே தயாரிக்கப்பட்ட, இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்திகளும் 1989 இன் 5 சதவீத, 12½ சதவீத மொத்த விற்பனவு வரி வீதங்களுக்கு எதிராக 1990 இல் 6 சதவீத, 15 சதவீத வரி வீதங்களுக்கு உட்பட்டன. இதேவேளை தயாரிப்பல்லா

# அட்டவணை 1.49

## கூறுகளின்படி அரசிறைத் தொகுப்பு

ரூபா பத்து இலட்சம்

| விடயம் | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | 1990 தற்காலிகம் | 1991 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| வரி அரசிறை ... ... | 31,272 | 35,119 | 35,946 | 47,513 | 55,920 | 61,206 | 64,899 |
| வருமானவரிகள் ... ... | 4,787 | 4,909 | 4,647 | 5,148 | 6,700 | 7,337 | 7,840 |
| தனியார் ... ... | 1,513 | 1,580 | 1,464 | 2,207 | 2,455 | 2,957 | 3,190 |
| கூட்டு ... ... | 3,274 | 3,329 | 3,183 | 2,941 | 4.245 | 4,380 | 4,650 |
| சொத்துக்கள் மீதான வரிகள் ... ... | 648 | 1,568 | 1,777 | 2,697 | 2,525 | 3,140 | 2,937 |
| மத்திய வங்கி வசமுள்ள திறைசேரி உண்டியல்கள் மீதான வரி ... | — | — | — | 2,345 | 3,350 | 2,618 | 2,500 |
| உள்நாட்டு பொருட்கள் பணிகள் மீதான வரிகள் ... ... | 14,787 | 15,667 | 17,021 | 20,828 | 25,973 | 28,770 | 32,272 |
| பொது விற்பனை, மொத்த விற்பனை வரி ... | 10,088 | 10,611 | 12,321 | 14,658 | 17,800 | 20,291 | 22,180 |
| தயாரிப்பு ... ... | 3,270 | 3,675 | 3,610 | 4,496 | 5,765 | 6,798 | 7,450 |
| தயாரிப்பல்லாத ... ... | 2,415 | 2,426 | 3,386 | 3,004 | 4,415 | 3,726 | 3,340 |
| இறக்குமதிகள் ... ... | 4,403 | 4,510 | 5,325 | 7,158 | 7,620 | 9,767 | 11,390 |
| கலால் வரி ... ... | 4,414 | 4,716 | 4,420 | 5,812 | 7,780 | 8,170 | 10,060 |
| குடிவகை ... ... | 1,485 | 1,644 | 1,754 | 1,955 | 2,440 | 2,657 | 3,010 |
| புகையிலை ... ... | 2,927 | 3,071 | 2,655 | 3,855 | 5,340 | 5,461 | 6,550 |
| ஏனையவை ... ... | 2 | 1 | 1 | 2 | — | 52 | 500 |
| உரிமக்கட்டணங்கள் ... ... | 285 | 340 | 280 | 358 | 393 | 309 | 32 |
| பன்னாட்டுவர்த்தகத்தின் மீதான வரிகள் ... | 11,050 | 12,975 | 12,501 | 16,495 | 17,372 | 19,341 | 19,350 |
| இறக்குமதிகள் (அ) ... ... | 9,414 | 11,051 | 10,671 | 14,923 | 15,330 | 16,792 | 17,500 |
| ஏற்றுமதிகள் ... ... | 1,636 | 1,924 | 1,830 | 1,572 | 2,042 | 2,549 | 1,850 |
| தேயிலை ... ... | 996 | 1,152 | 872 | 628 | 750 | 1,601 | 875 |
| இதில் பெறுமான விசிதவரி ... ... | 62 | 262 | 264 | 355 | 500 | 1,311 | 600 |
| இறப்பர் ... ... | 307 | 530 | 842 | 766 | 1,080 | 747 | 750 |
| தெங்கு ... ... | 232 | 148 | 67 | 126 | 150 | 151 | 150 |
| ஏனைய ஏற்றுமதிகள் ... ... | 101 | 94 | 49 | 52 | 62 | 50 | 75 |
| வரியல்லா அரசிறை ... ... | 5,966 | 7,026 | 5,803 | 6,466 | 5,342 | 6,758 | 6,630 |
| சொத்து வருவாய் ... ... | 4,731 | 4,541 | 4,080 | 4,387 | 3,383 | 4,192 | 3,241 |
| இதில் மத்திய வங்கி இலாபங்கள் ... | 1,779 | 1,723 | 1,650 | 2,000 | 500 | 500 | 250 |
| வட்டிவருவாய் ... ... | 1,560 | 1,404 | 1,451 | 1,198 | 971 | 1,143 | 951 |
| வர்த்தக முயற்சிகளின் மிகை ... | 803 | 1,229 | 850 | 1,041 | 1,784 | 2,235 | 1,800 |
| கட்டணங்களும விதிப்புக் கட்டணங்களும் ... | 347 | 334 | 412 | 627 | 660 | 838 | 853 |
| ஏனைய வரியல்லா அரசிறை (ஆ) ... ... | 888 | 2,151 | 1,311 | 1,452 | 1,299 | 1,731 | 2,536 |
| மொத்தம் ... ... | 37,238 | 42,145 | 41,749 | 53,979 | 61,262 | 67,964 | 71,529 |

(அ) இறக்குமதித் தீர்வைத் தள்ளுபடிகள் நீங்கலாக.
(ஆ) மூலதனப் பொருட்களின் விற்பனைகள் உட்பட.

(தொடரும்)

அட்டவணை 1. 49 (தொடர்ச்சி)

அரசிறைத் தொகுப்பு—கூறுகளின்படி (மொ. உ. உ. இன் சதவீதமாக)

| விடயம் | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | 1990 தற்காலிகம் | 1991 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| வரி அரசிறை ... | 17.4 | 17.9 | 16.2 | 18.9 | 19.7 | 19.1 | 17.7 |
| வருமான வரிகள் ... | 2.7 | 2.5 | 2.1 | 2.0 | 2.4 | 2.3 | 2.1 |
| தனியார் ... | 0.8 | 0.8 | 0.7 | 0.9 | 0.9 | 0.9 | 0.9 |
| கூட்டு ... | 1.8 | 1.7 | 1.4 | 1.2 | 1.5 | 1.4 | 1.3 |
| சொத்துக்கள் மீதான வரிகள் ... | 0.4 | 0.8 | 0.8 | 1.1 | 0.9 | 1.0 | 0.8 |
| மத்திய வங்கி வசமுள்ள திறைசேரி உண்டியல் மீதான வரிகள் | — | — | — | 0.8 | 1.2 | 0.8 | 0.7 |
| பொருட்கள் பணிகள் மீதான வரிகள் ... | 8.2 | 8.0 | 7.7 | 8.3 | 9.2 | 9.0 | 8.8 |
| பொது விற்பனை, மொத்த விற்பனை வரி ... | 5.6 | 5.4 | 5.6 | 5.8 | 6.3 | 6.3 | 6.0 |
| தயாரிப்பு ... | 1.8 | 1.9 | 1.6 | 1.8 | 2.0 | 2.1 | 2.0 |
| தயாரிப்பல்லாத ... | 1.3 | 1.2 | 1.5 | 1.2 | 1.6 | 1.2 | 0.9 |
| இறக்குமதிகள் ... | 2.5 | 2.3 | 2.4 | 2.8 | 2.7 | 3.0 | 3.1 |
| கலால் வரி ... | 2.5 | 2.4 | 2.0 | 2.3 | 2.7 | 2.5 | 2.7 |
| குடிவகை ... | 0.8 | 0.8 | 0.8 | 0.8 | 0.9 | 0.8 | 0.8 |
| புகையிலை ... | 1.6 | 1.6 | 1.2 | 1.5 | 1.9 | 1.7 | 1.8 |
| ஏனையவை ... | — | — | — | — | — | — | 0.1 |
| உரிமக்கட்டணங்கள் ... | 0.2 | 0.2 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 | — |
| பன்னாட்டு வர்த்தகத்தின் மீதான வரிகள் ... | 6.2 | 6.6 | 5.6 | 6.5 | 6.1 | 6.0 | 5.3 |
| இறக்குமதிகள் ... | 5.2 | 5.6 | 4.8 | 5.9 | 5.4 | 5.2 | 4.8 |
| ஏற்றுமதிகள் ... | 0.9 | 1.0 | 0.8 | 0.6 | 0.7 | 0.8 | 0.5 |
| தேயிலை ... | 0.6 | 0.6 | 0.4 | 0.2 | 0.3 | 0.5 | 0.2 |
| இதில் பெறுமான விகித வரி ... | — | 0.1 | 0.1 | 0.1 | 0.2 | 0.4 | 0.2 |
| இறப்பர் ... | 0.2 | 0.3 | 0.4 | 0.3 | 0.4 | 0.2 | 0.2 |
| தெங்கு ... | 0.1 | 0.1 | — | 0.1 | 0.1 | — | — |
| ஏனைய ஏற்றுமதிகள் ... | 0.1 | — | — | — | — | — | — |
| வரியல்லா அரசிறை ... | 3.3 | 3.6 | 2.6 | 2.6 | 1.9 | 2.1 | 1.8 |
| சொத்து வருவாய் ... | 2.6 | 2.3 | 1.8 | 1.7 | 1.2 | 1.3 | 0.9 |
| இதில் மத்திய வங்கி இலாபங்கள் ... | 1.0 | 0.9 | 0.7 | 0.8 | 0.2 | 0.2 | 0.1 |
| வட்டிவருவாய் ... | 0.9 | 0.7 | 0.7 | 0.5 | 0.3 | 0.4 | 0.3 |
| வர்த்தக முயற்சிகளின் மிகை ... | 0.4 | 0.6 | 0.4 | 0.4 | 0.6 | 0.7 | 0.5 |
| கட்டணங்களும் விதிப்புக்கட்டணங்களும் ... | 0.2 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 | 0.3 | 0.2 |
| ஏனைய வரியல்லா அரசிறை ... | 0.5 | 1.1 | 0.6 | 0.6 | 0.5 | 0.5 | 0.7 |
| மொத்தம் ... | 20.7 | 21.4 | 18.8 | 21.4 | 21.6 | 21.2 | 19.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

நடவடிக்கைகள் மீதான மொத்த விற்பனவு வரிகள் ரூ. 37,260 இலட்சமாக அமைந்து சென்ற ஆண்டின் 11 சதவீத வீழ்ச்சிக்கு எதிராக 24 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. இறக்குமதிகள் மீதான மொத்த விற்பனவு வரிகள் ரூ. 97,670 இலட்சமாக அமைந்து 36 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. இது இறக்குமதிகளின் உயர்ந்த பெறுமதி, இறக்குமதித் தீர்வைகளும் மொத்த விற்பனவு வரி வீதங்களும் உயர்த்தப்பட்டமை என்பனவற்றின் விளைவாக ஏற்பட்டதாகும்.

கலால் வரிகள் 1990 இல் ரூ. 81,700 இலட்சம் கொண்ட மொத்தத் தொகையை வழங்கியன. இது முந்திய ஆண்டின் சேகரிப்பினைவிட 41 சதவீதம் கொண்ட ஒரு அதிகரிப்பாகும். புகையிலை உற்பத்திகள் மீதான கலால் வரிகளிலிருந்து கிடைத்த அரசிறை ரூ. 54,610 இலட்சமாக அமைந்து 42 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் மதுவகையிலிருந்து கிடைத்த அரசிறை ரூ. 26,570 இலட்சமாக அமைந்து 36 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. கலால் வரிகளிலிருந்து கிடைத்த அரசிறைச் சேகரிப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு பெரும்பாலும் இவ்வாண்டில் தீர்வை வீதங்களில் செய்யப்பட்ட மேல்நோக்கிய திருத்தத்தின் காரணமாக ஏற்பட்டதாகும். புகையிலை மீதான குறித்துரைக்கப்பட்ட வரி கி.கி. ஒன்றுக்கு ரூ. 1,315 இலிருந்து கி.கி. ஒன்றுக்கு ரூ. 1,565 ஆக உயர்த்தப்பட்ட வேளையில் வெறியக் குடிவகை, பியர் என்பன மீதான குறித்துரைக்கப்பட்ட வரிகள் முறையே போத்தல் ஒன்றுக்கு ரூ. 5 இனாலும், போத்தலொன்றுக்கு ரூ. 2.25 இனாலும் உயர்த்தப்பட்டன. 1990 நவெம்பர் நடுப்பகுதியில் நடைமுறைக்கு வந்த புதிய கலால் வரிகளிலிருந்து கிடைத்த அரசிறை ரூ. 520 இலட்சமாக அமைந்தது.

பன்னாட்டு வர்த்தகம் தொடர்பான வரிகள் முந்திய ஆண்டின் ரூ. 164,950 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 193,410 இலட்சம் கொண்ட மொத்தத் தொகையை வழங்கின. இறக்குமதிகளின் மொத்தப் பெறுமதி 34 சதவீதத்தால் அதிகரித்தபோதும் இறக்குமதித் தீர்வைகளிலிருந்து கிடைத்த அரசிறைச் சேகரிப்பு ரூ. 167,920 இலட்சமாக அமைந்து 1989 இன் அரசிறைச் சேகரிப்பினைவிட மிதமான அதிகரிப்பான 12.5 சதவீதத்தை மட்டும் பதிவு செய்தன. இதன்படி சராசரித் தீர்வை வீதம் 1989 இன் 18.6 சதவீதத்திலிருந்து 1990 இல் 15.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும் பொறிகள், பொறிக் கருவிகள், மின் உபகரணங்கள், உந்து ஊர்திகளும் உதிரிப்பாகங்களும், புகைப்பட, சங்கீத, மின் உபகரணங்களும் கருவிகளும் போன்றவற்றின் இறக்குமதியிலிருந்து கிடைத்த இறக்குமதித் தீர்வைகள் ரூ. 41,400 இலட்சமாக அமைந்து 1990 இல் 41 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தன. பெற்றோலிய உற்பத்திகளை உள்ளடக்கிய இடைநிலைப் பொருட்களின் இறக்குமதியிலிருந்து கிடைத்த இறக்குமதித் தீர்வைச் சேகரிப்பு 1989 இன் ரூ. 65,340 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1990 இல் ரூ. 73,330 இலட்சமாக அமைந்தது. ஏற்றுமதி வரிகளிலிருந்து கிடைத்த மொத்த அரசிறை 1989 இன் ரூ. 15,720 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 25,490 இலட்சமாக அமைந்தது. தேயிலை மீதான ஏற்றுமதி வரிகளிலிருந்து கிடைத்த அரசிறை 1990 இல் ரூ. 16,010 இலட்சமாக அமைந்து இரு மடங்கிற்கு மேலான அதிகரிப்பைப் பதிவு செய்தது. இது சாதகமான விலைகள், அதிகரித்த ஏற்றுமதி அளவு ஆகிய இரண்டினதும் காரணமாக ஏற்பட்டதாகும்.

கூட்டு, தனியார் வருமான வரிகள் ஆகிய இரண்டிலுமிருந்து கிடைத்த அரசிறைச் சேகரிப்பு ரூ. 73,370 இலட்சமாக அமைந்து 43 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. தனியார் வருமான வரிச் சேகரிப்பு ரூ. 29,570 இலட்சமாக அமைந்து 34 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்த வேளையில் கூட்டு வருமான வரிகளிலிருந்தான வரிச் சேகரிப்பு ரூ. 43,800 இலட்சமாக விளங்கி 49 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. இவ் அதிகரிப்புக்கள் பெரும்பாலும் 1990 இல் பெயரளவு வருமானத்தில் ஏற்பட்ட விரைவான வளர்ச்சி காரணமாக ஏற்பட்டதாகும். அரசின் அரசிறையின் புள்ளிவிபரத் தொகுப்பு அட்டவணை 1.49 இல் தரப்பட்டுள்ளது.

### வெளிநாட்டுக் கொடைகள்

1990 இல் வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட வெளிநாட்டுக் கொடைகள் முன்னைய ஆண்டின் ரூ. 64,070 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 66,970 இலட்சமாக விளங்கின. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக நோக்குகையில் வெளிநாட்டுக் கொடைகள் 1989 இன் 2.5 சதவீதத்திலிருந்து 1990 இல் 2.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. மொத்தச் செயற்றிட்டக் கொடைகள் ரூ. 58,010 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 15 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டின. பண்ட மற்றும் உணவு உதவிக் கொடைகளிலிருந்தான பெறுகைகள் ரூ. 8,960 இலட்சமாக விளங்கி 35 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தன. யப்பானிலிருந்தான கொடைப் பகிர்ந்தளிப்புக்கள் ரூ. 30,650 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் 40 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1990 இல் வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட மொத்தக் கொடைகளில் 46 சதவீதத்தினைக் கொண்டிருந்தன.

### நடைமுறைச் செலவு

1990 இல் நடைமுறைச் செலவு ரூ. 717,710 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டில் ஏற்பட்ட செலவான ரூ. 568,840 இலட்சத்தினைவிட 26 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. பொருட்கள் பணிகள் மீதான செலவினம் ரூ. 301,670 இலட்சமாக விளங்கி 1989 இன் 45 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1990 இல் மொத்த நடைமுறைச் செலவில் 42 சதவீதத்திற்கு வகை கூறியது. மொத்த நடைமுறை மாற்றல்கள் ரூ. 209,360 இலட்சமாக அமைந்து 1989 இன் 30 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1990 இன் நடைமுறைச் செலவில் 29 சதவீதத்தினைக் கொண்டிருந்தன. அரசின் படுகடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 206,680 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் 25 சதவீதத்திற்கெதிராக நடைமுறைச் செலவில் 29 சதவீதத்தினைக் கொண்டிருந்தன.

பொருட்கள், பணிகள் மீதான செலவினம் சம்பளங்கள், கூலிகள் என்பன வற்றின் பேரிலான ரூ. 157,490 இலட்சத்தினையும் ஏனைய பொருட்கள் பணிகளின் பேரிலான ரூ. 144,190 இலட்சத்தினையும் உள்ளடக்கியிருந்தது. மொத்த நடைமுறைச் செலவுகளில் ஏறத்தாழ ஐந்திலொரு பங்கிற்கு வகை கூறும் அரச ஊழியர்களின் சம்பளங்கள், கூலிகள் மீதான செலவினம் 9 சத வீதத்தினால் உயர்வடைந்தமைக்கு, மாதமொன்றுக்கு ரூ. 2,000 இற்குக் குறை வான தொடக்கச் சம்பளத்தைப் பெறும் அரச ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படி ரூ. 200 இனால் அதிகரிக்கப்பட்டமையே பெருமளவிற்குக் காரண மாகும், பயணச் செலவுகள், மின்வலு மற்றும் தொடர்பூட்டல் கட்டணங்கள், பொருட்களின் கொள்வனவு, அலுவலக வழங்கல்கள் மற்றும் பாதுகாப்புடன் தொடர்பான பொருட்கள் போன்றவற்றை உள்ளடக்கிய ஏனைய பொருட்கள் பணிகள் மீதான செலவு நடைமுறைச் செலவில் 20 சதவீதத்தினைக் கொண் டிருந்து 30 சதவீத அதிகரிப்பினைக் காட்டியமைக்கு அதிகரித்த பாதுகாப்புச் செலவுகளே பெரும்பாலும் முழுக் காரணமாகும்.

ஓய்வூதியக் கொடுப்பனவுகளின் பேரிலான ரூ. 44,900 இலட்சங்களையும் உள்ளடக்கிய மொத்த நடைமுறை மாற்றல்கள் 1990 இல் ரூ. 209,360 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் 32 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகை யில் 23 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்தன. உணவு முத்திரை, மண்ணெண் ணெய் முத்திரை, மதிய உணவு, சனசக்தி நிகழ்ச்சித் திட்டம் என்பவற்றை உள்ளடக்கிய நலன்புரிச் செலவுகள் 1989 இன் ரூ. 49,920 இலட்சத்திலிருந்து 1990 இல் ரூ. 83,680 இலட்சத்திற்கு உயர்வடைந்தமைக்குச் சனசக்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் மதிய உணவுத் திட்டம் என்பனவற்றின் மீதான உயர்ந்த செலவுகளே காரணமாகும். அதேவேளை இலவச பாடநூல்கள், பள்ளிக்கூடப் பருவகாலச் சீட்டுக்கள், குழந்தைப் பால் மா உதவுதொகை போன்ற ஏனைய ஆதரவு நிகழ்ச்சித் திட்டங்கள் மீதான செலவு முன்னைய ஆண்டின் ரூ. 3,330 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 4,440 இலட்சமாக விளங்கியது. வர்த்தக மல்லா நிறுவனங்கள் உட்பட அரச கூட்டுத்தாபனங்களுக்கான மாற்றல்கள் ரூ. 38,270 இலட்சமாக விளங்கியதுடன் இதில் ரூ. 13,770 இலட்சம் இலங்கை போக்குவரத்துச் சபையின் மீள் அமைத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் பேரில் ஏற்பட்டதாகும். இலங்கைப் புகையிரதப் பகுதி மற்றும் அஞ்சல் திணைக்களம் என்பவற்றின் தொழிற்பாட்டு இழப்புக்கள் 1989 இன் ரூ. 6,700 இலட்சத்தி லிருந்து 1990 இல் ரூ. 4,320 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்குப் புகை வண்டிக் கட்டணங்கள் மேல்நோக்கித் திருத்தப்பட்டமையே முக்கிய காரண மாகும். மீளமைப்புச் செலவு நீங்கலாக வர்த்தக அரச முயற்சிகளுக்கான நடை முறை மாற்றல்கள் முன்னைய ஆண்டின் ரூ. 16,130 இலட்சத்துடன் ஒப்பிடுகை யில் 1990 இல் ரூ. 13,720 இலட்சமாக விளங்கின.

1990 இல் அரச படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 206,680 இலட்சமாக விளங்கின. இது முன்னைய ஆண்டின் செலவான ரூ. 143,520 இலட்சத்திலும் பார்க்க 44 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். உள் நாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 169,900 இலட்சத்திற்கு 54 சதவீதத்தினால் உயர்வடைந்து ரூபாக் கடன்கள் மீதான ரூ. 68,570 இலட்சத்தையும், திறைசேரி உண்டியல்கள் மீதான ரூ. 95,630 இலட்சத்தையும், ஏனைய கணக்குகள் மீதான ரூ. 5,700 இலட்சத்தையும் உள்ளடக்கியிருந்தன. ரூபாக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டினைவிட 16 சதவீதத்தினால் உயர்வடைந்தவேளையில் திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 88 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தமைக்கு கடன்பாடுகளின் அளவு உயர்வடைந்தமையும் சராசரியாக 17 சதவீதமளவில் காணப்பட்ட உயர்ந்த வட்டி வீதங்களுமே காரணமாகும்.

**மூலதனச் செலவும் தேறிய கடன் வழங்கலும்**

மூலதனச் செலவு 1989 இன் ரூ. 207,500 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1990 இல் ரூ. 191,610 இலட்சமாக விளங்கியது. இதன்படி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக மூலதனச் செலவினம் 1989 இன் 8.2 சதவீதத்திலிருந்து 1990 இல் 6.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. நிலையான சொத்துக்களின் கையேற்பு, கட்டுமானம், பேணல் என்பனவற்றின் மீதான மூலதனச் செலவு முன்னைய ஆண்டின் ரூ. 130,690 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 116,640 இலட்சமாக விளங்கியது. நியதிச் சபைகள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கான மூலதன மாற்றல்கள் 1989 இன் ரூ. 63,300 இலட்சத்திலிருந்து 1990 இல் ரூ. 58,150 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த மூலதன மாற்றல்களில் வீதி அபிவிருத்தி மேலாண்மைச் சபை வீதி புத்தாக்க நிகழ்ச்சித் திட்டத்தின் பேரில் ரூ. 18,700 இலட்சங்களைப் பயன்படுத்தியது. இதேவேளை மகாவலி அபிவிருத்தி மேலாண்மைச் சபையின் கீழான மூலதனச் செலவினம் 1989 இன் ரூ. 24,750 இலட்சத்திலிருந்து 1990 இல் ரூ. 18,100 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

1990 இல் மீள் கொடுப்பனவு கழிக்கப்பட்ட கடன் வழங்கல் (தேறிய கடன் வழங்கல்) 1989 இன் ரூ. 45,300 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 88,820 இலட்சமாக விளங்கியது. முற்பணக் கணக்குக் கொடுக்கல் வாங்கல்கள் முன்னைய ஆண்டின் ரூ. 9,930 இலட்சம் கொண்ட மிகைக்கு எதிராக ரூ. 16,990 இலட்சம் கொண்ட தேறிய வெளிக் கொடுப்பனவொன்றினை உருவாக்கியமைக்கு அரச அலுவலர்கள் முற்பணக் கணக்குகளிலும் மருத்துவக் களஞ்சியங்கள் முற்பணக் கணக்குகளிலும் காணப்பட்ட வெளிப்பாய்ச்சல்களே பெருமளவுக்குக் காரணமாகும். அரச கூட்டுத்தாபனங்களுக்கான கடன் வழங்கலூடாகப் பெருமளவிற்கு இடம்பெற்ற நிதிச் சொத்துக்களின் கையேற்பு ரூ. 75,870 இலட்சமாக விளங்கியது. முன்னைய ஆண்டின் இது தொடர்பான பெறுமதி ரூ. 59,010 இலட்சமாக இருந்தது. சமனலவெவ மற்றும் இரந்தம்பே மின்வலுச் செயற்றிட்டங்களின் தொடர்ச்சியான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இலங்கை மின்சபைக்கு வழங்கப்பட்ட கடன் வழங்கல் முன்னைய ஆண்டின் ரூ. 37,750 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1990 இல் ரூ. 54,100 இலட்சமாக விளங்கியது.

## அட்டவணை 1.50

### செலவு, மீள் கொடுப்பனவுகளைக் கழித்த கடன் வழங்கல் என்பவற்றின் பொருளாதாரப் பகுப்பாய்வு

ப. இ. ரூபாய்களில்

| விடயம் | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1990 தற்காலிகம் | 1991 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| **நடைமுறைச் செலவு** | **33,966** | **39,560** | **46,132** | **56,884** | **63,562** | **71,771** | **72,962** |
| பொருட்கள் பணிகள் மீதான செலவுகள் | 15,154 | 18,466 | 20,654 | 25,508 | 25,779 | 30,167 | 31,782 |
| சம்பளங்களும் கூலிகளும் | 8,027 | 8,006 | 10,016 | 14,446 | 14,129 | 15,749 | 18,110 |
| ஏனைய பொருட்களும் பணிகளும் | 7,127 | 10,460 | 10,638 | 11,062 | 11,650 | 14,419 | 13,672 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 8,762 | 10,157 | 12,590 | 14,352 | 19,941 | 20,668 | 22,189 |
| வெளிநாட்டு | 2,209 | 2,564 | 2,896 | 3,337 | 3,461 | 3,678 | 4,382 |
| உள்நாட்டு | 6,553 | 7,593 | 9,694 | 11,105 | 16,480 | 16,990 | 17,807 |
| நடைமுறை மாற்றல்களும் உதவு தொகைகளும் | 10,050 | 10,937 | 12,888 | 17,024 | 18,497 | 20,936 | 22,492 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு | 2,350 | 1,722 | 2,349 | 3,177 | 1,681 | 3,827 | 2,408 |
| அரசின் ஏனைய மட்டங்களுக்கு | 600 | 609 | 918 | 902 | 1,027 | 1,237 | 1,099 |
| குடியிருப்புகளும் ஏனைய துறைகளும் | 7,100 | 8,606 | 9,621 | 12,945 | 15,789 | 15,872 | 18,985 |
| உணவு முத்திரையும் உணவு உதவு தொகைகளும் | 1,549 | 1,666 | 1,895 | 3,932 | 3,782 | 5,122 | 4,875 |
| சனசக்தி | — | — | — | 705 | 4,400 | 2,912 | 4,900 |
| ஓய்வூதியங்கள் | 2,984 | 3,242 | 4,128 | 4,735 | 4,967 | 4,490 | 6,333 |
| வளமாக்கி உதவு தொகை | 614 | 511 | 600 | 796 | — | — | — |
| ஏனைய | 1,953 | 3,187 | 2,998 | 2,777 | 2,640 | 3,348 | 2,877 |
| குறைச் செலவுக்கான ஒதுக்கு | — | — | — | — | — 656 | — | — 3,500 |
| **மூலதனச் செலவு** | **23,236** | **22,816** | **22,878** | **20,750** | **21,653** | **19,161** | **28,118** |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு | 7,888 | 10,983 | 12,006 | 13,069 | 13,336 | 11,664 | 16,460 |
| மூலதன மாற்றல்கள் | 15,488 | 11,833 | 10,872 | 7,681 | 9,767 | 7,497 | 14,659 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு | 14,874 | 11,185 | 9,684 | 6,330 | 7,792 | 5,815 | 12,047 |
| அரசின் ஏனைய மட்டங்களுக்கு | 472 | 571 | 1,123 | 1,332 | 1,715 | 1,574 | 2,311 |
| ஏனைய | 101 | 77 | 65 | 29 | 260 | 109 | 301 |
| குறைச்செலவுக்கான ஒதுக்கு | — | — | — | — | — 1,450 | — | — 3,000 |
| **மீள் கொடுப்பனவுகளைக் கழித்த கடன்வழங்கல்** | **1,991** | **1,518** | **7,522** | **4,530** | **4,647** | **8,882** | **6,471** |
| இதில் முற்பணக் கணக்குகள் | — 170 | — 1,180 | 2,732 | — 993 | 250 | 1,699 | 250 |
| மொத்தம் | 59,193 | 63,894 | 76,532 | 82,164 | 89,862 | 99,814 | 107,551 |

(தொடரும்)

அட்டவணை 1.50 (தொடர்ச்சி)

## செலவு, மீள் கொடுப்பனவுகளைக் கழித்த கடன் வழங்கல் என்பவற்றின் பொருளாதாரப் பகுப்பாய்வு
(மொ. உ. உ. இன் சதவீதமாக)

| விடயம் | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | 1990 தற்காலிக மானவை | 1991 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
